**யடிநுவர பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 29 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான யடிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐந்து செயற்திட்டங்களின் கீழ் சம்பளங்கள் மற்றும் படி ஆக ரூபா 23,626,556 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது, அதற்காக ரூபா 17,756,306 இற்கான சம்பள மீளளிப்பு தொகையை ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) களஞ்சிய பொருட்கள் கொள்வனவு செய்யும் போது, பொதுக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படாமல் நேரடியாக செலவுகளுக்கு வரவு வைப்பதன் காரணமாக, வருட இறுதியில் போது நீர், மின்சாரம் மற்றும் மருந்துவ ஆகிய களஞ்சிய பகுதிகளில் மீதியாகவிருக்கும் களஞ்சியம் இருப்புக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ஆயுள்வேத பகுதிக்கு கிடைத்திருந்த ரூபா 285,000 இற்கான உதவி பெறல் மற்றும் வழங்கல் என்பவற்றை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

---------------------------------------------------------------------

பலவின கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,855,553 ஆக காணப்பட்டதுடன், பட்டோலையின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,050,911 என காணப்பட்டமையால் ரூபா 804,642 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

--------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 63,163,154 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,081,116 ஆக காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 14,863,488 இற்கான செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதியில் ரூபா 9,191,616 இற்கான செலவு கடன் கொடுத்தோராக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்தள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,659,538 ஆக இருந்தது. அம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 5,015,100 தொகையொன்று மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால், கூட்டுப் பெறுமதி ரூபா 5,735.860 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்ள முடியாதுள்ளது.

1.3.5 சட்டங்கள் விதிகள் பிரமானங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------

1988 இன் 56 ஆம் இலக்கம், 2000 இன் 53 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டுள்ள 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23 இன் பிரகாரம், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய வர்த்தக நிலையங்களிடையே 26 வர்த்தகங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமையால், சபை ரூபா 104,000 வருமானமொன்றை இழந்துள்ளது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,619,226 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,344,401 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 16,274,825 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பு தொகையென ரூபா 17,756,306 தொகையொன்று கிடைத்திருந்த போதும் சம்பளங்கள், படிகள் என ரூபா 23,626,556 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் ரூபா 5,870,250 இற்கான தொகையொன்று ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அத் தொகை சம்பள மீளளிப்பு தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தில் நூற்றிற்கு 11 ஆக ஆகியுள்ளது.

2.3 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களை காட்டும் விகிதாசாரம் 6:1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போதான விகிதாசாரம் 7:1 ஆன உச்ச மட்டத்தில் காணப்படவில்லை. ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களில் நுற்றிற்கு 49 எனப்படும், ரூபா 50 மில்லியன் அறவிடப்படக் கூடிய துணை சேவைகள் ஆக காணப்பட்டதுடன், அவற்றில் கடன்பட்டோர் நூற்றிற்கு 45 எனப்படும் ரூபா 46 மில்லியன் ஆகும்.. மொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 62 எனப்படும் ரூபா 09 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன் கொடுத்தோர் அடங்கியுள்ளனர்.

2.4 வருமான நிருவாகம்

----------------------------

2.4.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 5,537,242 ஆகும்.

2.4.2 நீதி மன்றத் தணடப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 728,873 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 4,535,746 தொகையொன்றும் கிடைக்க வேண்டியிருந்தது. அம்மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 84,132 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.4.3 செலுத்துகை டவர் கட்டணம்

---

(அ) 11 செலுத்துகை டவர்கள் தொடர்பான கோவைகள் சபையில் காணப்பட்டதுடன் 02 டவர்கள் சபையில் இருந்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல், அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனைத்து 05 மீற்றர் உயரத்திற்கும் ரூபா 10,000 வீதம் கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனினும் தொழில்நுட்ப அலுவலர்களின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த டவர்கள் தொடர்பாக கட்டணங்கள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 12 செலுத்துகை டவர்களில் இருந்து தொலை தொடர்பு வசதிகள் வழங்கியிருந்த கம்பனிகளின் பிரகாரம் ஆண்டிற்கான வர்த்தக வரி அறவிடப்படவேண்டும் எனினும் டயலொக், டெலிகொம் மற்றும் ஹஷ்ஸன் கம்பனிகள் தவிர ஏனைய கம்பனிகளில் இருந்த வர்த்தகவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அவற்றை நிர்மாணிப்பதற்கான இணக்கச் சான்றிதழும் பெற்றிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.1.1 நீர் மானிகள் கொள்வனவு செய்தல்

---

நீர் செயற்திட்டத்திற்காக நிவ் சென்றல் ஹாட்வயார் நிறுவனத்தில் இருந்து 2013 அக்டோபர் 29 திகதி 30 கெனட் இன நீர் மானிகள் ஒன்று ரூபா 5,250 வீதம் ரூபா 157,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் காலப் பகுதியிலே அந்த இனத்தை சேர்ந்த கெண்ட் நீர் மானி ஒன்று ரூபா 4,700 வீதம் உபுல் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் என்னும் நிறுவனத்தினால் பாததும்பர பிரதேச சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யும் போது போட்டித் தன்மை மற்றும் சிக்கனத் தன்மை தொடர்பாக கவனம் செலுத்தாமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு ஒரு நீர் மானியின் மூலம் ரூபா 550 வீதம் ரூபா 16,500 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

3.1.2 காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்தல்

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 02 ஏக்கர் 01 ரூட் 31.75 பர்சஸ் அளவிளான அளவை வரைபு ஒன்று சமர்பித்திருந்த போஅங்க, வலவ்வத்த, குடாஓய பிலிமதலாவ விலாசத்தில் அமைந்துள்ள "Green City" காணியை துண்டுகளை பிரித்து விற்பனை செய்வதற்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் 01 ஹெக்டயருக்கு கூடுதலாக காணப்படும் காணிகளை துண்டுகளாக பிரிக்கும் போது காணியின் பாதை தவிர மீதியாக காணப்படும் தரைப்பகுதியில் 10% இற்கான அளவு ஒன்று பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும் எனினும் 06 பர்சஸ் காணி குறைவாக ஒதுக்கப்பட்டிருந்ததென நில அளவை வரைபின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ii) காணியின் துனை பகிர்வு தொடர்பாக இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை.

(iii) 2014 ஜுலை 02 ஆந் திகதி மேற் கூறிய காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அங்கீகாரம் இன்றி வீடு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது என வெளிப்படுத்தப்பட்டது.

3.1.3 பதவியணிக் கடன்

--------------------------

சபை சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்த நான்கு அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 398,185 இற்கான கடன் தொகை ஒரு வருடத்தை விட கூடிய காலம் அறவிடப்படாமல் காணப்பட்டது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு பௌதீக வளங்கள்

--------------------------------------------------------------------------------------------------

ரூபா 863,000 பெறுமதியான 08 வாகனங்கள் ஒரு வருடத்தை மிகைத்த காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் இந்த வாகனங்களை செலுத்தக் கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்கு அல்லது அவற்றை அகற்றி கணக்குகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் மற்றும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------------------

4.1 கொள்வனவுத் திட்டம்

--------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

சபையின் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைந்திருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு மற்றும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்யும் போது 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 164 இற்கான முரண்கள் காணப்பட்டதுடன் 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 22 முதல் நூற்றிற்கு 95 வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு நிதிக் கட்டுப்பாடு அலகு ஒன்றாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்